வருடாந்த அறிக்கை

2018

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

கைத்தொழில் வர்த்தக அமைச்சு

அறிமுகம்

சிறுதொழில் மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எஸ்.எம்.இ) இலங்கைக்கு வசதியாக இந்த அமைப்பின் ஆணை 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் ஆண்டின் கீழ் நிறுவப்பட்ட தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையம் (நெடா). உள்ளூர் நிறுவனங்களுக்கு உள்கட்டமைப்பு, நிதி மற்றும் கொள்கை அளவிலான ஆதரவை வழங்குவதன் மூலம் SMES ஐ அதிகாரம் செய்வதற்கான அதிகாரச் சட்டம் சட்டமியற்றுகிறது

வரி அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலுடன் பிராந்திய மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரம், 2006 முதல் 2010 வரை முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் NEDA பட்டியலிடப்பட்டது. தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட NEDA & 2010 ஆம் ஆண்டில் வர்த்தகம் மற்றும் இது தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சகத்திலிருந்து இன்றுவரை நிர்வகிக்கப்படுகிறது

பொது மற்றும் தனியார் வங்கிகள், வணிக அறைகள் அரசு சாரா நிறுவனங்கள் (உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் போன்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடனான SME சமூக தொடர்புகளுக்காக பிரதேச செயலக மட்டத்திலிருந்து பல்வேறு திட்டங்கள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை NEDA துவக்கியது. இந்த திட்டங்களின் நோக்கங்கள் நிதி உதவி, அடிமட்ட அளவிலான SME க்களுக்கான பயிற்சி ஆலோசனை ஆதரவு போன்ற அடிப்படை தேவைகள். DS பிரிவு மட்டத்தில் SME களை ஒருங்கிணைக்க பிரதேச செயலகம் (DS) மட்டத்தில் பிராந்திய அளவிலான அதிகாரிகள் இருந்தனர்.



தொலைநோக்கு

“நாட்டின் பொருளாதார அரசியல் மற்றும் சமூக தேவைக்குப் பங்களிப்புச் செய்யும்வகையில் சக்திவாய்ந்ததும், நிலைபேறானதுமான ஒரு போட்டித்தொழில் முயற்சித் துறையினரை உருவாக்குதல்.”

பணிக்கூற்று

“இலங்கையின் தேசிய பொருளாதாரத்தினை பூரணமாக்குவதற்குத் தேவையான தே.தொ.அ.அ.இனது (நேனுயு) தொழில் முயற்சியாண்மைகளின் அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மைகளினை வசதிப்படுத்துவதும், தூண்டுதலுக்குமான ஒத்தாசையை வழங்கல்.”

நோக்கங்கள்

இலங்கைக்குள் சிறிய, நடுத்தர (ளுஆநு) அபிவிருத்திகளை ஊக்குவித்தல், தரமுயர்த்துதல் மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.

தே.தொ.அ.அ.இன் (நுேனுயு) சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சிகளினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்றவிதமாக உட்புகுத்தும் நோக்கத்துடன் தொழில்முயற்சி வடிவமைப்பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவதனையும் ஊக்கமளித்துத் தூண்டுதல்.

கைத்தொழில் மற்றும் விவசாயத்திலான வியாபாரத்தினையும், அபிவிருத்தியினையும் கருத்தில்கொண்டு கொள்கை, திட்டம், உயர்வான ஊக்குவிப்பினை பொருத்தமான முறையில் வடிவமைப்பதுடன் வினைத்திறமையான ஒத்துழைப்பினையும், ஊக்குவிப்பினையும் வழங்கல்

தொழில்நுட்பத்திறனுடன்கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை தொழில்முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.

அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப்பதற்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

தொழில்முயற்சி, அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதிவசதியினை தொழில்முயற்சியாளர்களின் மூலமாகப்பெற ஏற்பாடுசெய்தல்.

உற்பத்தி, அபிவிருத்தி, தொழில்நுட்பவியல் தரமுயர்த்தல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தகமயமாக்கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்ந்த நிலைக்கு மாற்றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

பணிப்பாளர் சபை

1. திரு. டீ. கே. போகொல்லாகம - (தலைவர்)
2. திரு. எஸ். பாலசுப்பிரமணியம் - (மேலதிகச் செயலாளர், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)
3. திருமதி. ஏச். ஏ. ரீ. எறண்டி - (உதவிப் பணிப்பாளர், நிதி அமைச்சு)
4. திரு. மஞ்சுல சமரவிக்கிரம
5. திரு. எம்.எஸ்.எம். நதீர்
6. திரு. ஹிமாலி ஜினதாச
7. திரு. எம்.எவ்.எஸ். டபிளியூ. ஸ்ரெம்போ.
8. திரு. செய்நுடீன் மரிக்கார் இல்காம்.
9. திரு. நயினா மொஹமட் சறூர்.

2023 மார்ச் 10 ஆம் திகதி-

கௌரவ ரமேஸ் பதிரன

கைத்தொழில் வர்த்தக அமைச்சர்,

கைத்தொழில் வர்த்தக அமைச்சு,

இல.73.்.1,

காலி வீதி,

கொழும்பு-03.

<u>வருடாந்த அறிக்கை 2018</u>

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, 2018ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையுடன் சம்பந்தமாக பின்வரும் ஆவணங்களினை நான் சமர்ப்பிக்கின்றேன்.

01) தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை.

02) 31 டிசம்பர் 2018 அன்றுள்ளபடியான ஐந்தொகை, 31 டிசம்பர் 2018இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவுக்கூற்று மற்றும் 31 டிசம்பர் 2018இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்று.

03) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,

லசந்த காரியப்பெரும
தலைவர்.்பணிப்பாளர் நாயகம்.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

1.0 வியாபார அபிவிருத்திச் சேவை விபரக்கொத்தினைத் தயாரித்தல்.

2.0 வியாபார அபிவிருத்திச் சேவையின் இயலுமை அபிவிருத்தி ஏற்பாட்டாளர்கள்.

3.0 பிராந்திய தொழில்முயற்சியாளர்களின் விருதுவழங்கல் விழாக்கள்.

4.0 மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்.

5.0 தொகுதிவாரியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

6.0 வியாபார வர்த்தகச் சந்தைகள்.

7.0 பொதிசெய்தல் உதவி தேவைப்படும் பிராந்திய தொழில் முயற்சியாளர்களுக்கு வசதி செய்துகொடுத்தல்.

8.0 சர்வதேச வியாபாரத் தூதுக்குழு.

9.0 கொள்வனவாளர், விற்பனையாளர் சந்திப்பு.

10.0 பிராந்திய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

11.0 ,,மாக்கடுற'' பரீட்சித்துப்பார்த்தல், தொழில்நுட்ப கைமாற்று நிலையத்தினைத் தபாபித்தல்.

12.0 ,,உபாதிதாரி வியாவாசயக உதானய'' நிகழ்ச்சித்திட்டம்.

13.0 சி.ந.தொ.மு களுக்கு எவ்வாறு என்பதை தெரித்துகொள்ளல் ஒத்துழைப்பினை மேம்படுத்தல்.

14.0 தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தியினூடாக இலங்கை இளைஞர்களை உயர்வடையச்செய்தல்.

15.0 தொழில் முயற்சி முகாமைத்துவ முறைமை (தொ.மு.மு).

16.0 தொழில் முயற்சியாண்மைமைக் கல்வியின் மீதான பிராந்திய ,,ஆசிய பசிபிக்'' இன் 7வது ''யுனெஸ்கோ எபிட்'' கூட்டம்.

17.0 ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். (ஐ.நா.அ.தி.)

18.0 நீங்கள் வழிகாட்டுங்கள் செயற்றிட்டம்.

19.0 ஐ.நா.அ.செ. சமூக தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

தே.தொ.அ.அ. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2018

நிகழ்ச்சித்திட்டம் 01: வியாபார அபிவிருத்திச் சேவை விபரக்கொத்தினைத் தயாரித்தல்.

தே.தொ.அ.அ.வானதுஇ நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காகவும்இ வியாபார அபிவிருத்திச் சேவை(வி.அ.சே), ஏற்பாட்டாளர்களுக்காகவும்இ வழிகாட்டி நூலினை வெளியிடத் தீர்மானித்துள்ளது. இது தே.தொ.அ.அ. இல்இ பதிவுசெய்துள்ள வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களின் விபரங்களை உள்ளடக்கியுள்ளது. இது தொழில்முயற்சியாளர்கள் வெற்றிகரமான தொழில்முயற்சியினைத் தாபிக்க வழிகாட்டும் ஒரு பயனுள்ள ஆவணமாகக் காணப்படும். (இதில் கிட்டத்தட்ட 200 பக்கங்கள் உள்ளன.)

தே.தொ.அ.அ. வானதுஇ அதனது அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்தும், பத்திரிகை விளம்பரங்கள் மூலமும் தகவல்களைத் திரட்டுகின்றது. இது 2019ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்படப் பட்டியலிடப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டம் 02: வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) ஏற்பாட்டாளர்களுக்கான இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

வேலையற்றோர் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரச் சமூகம் உள்ளிட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு மாத்திரமல்லாமல், வாடிக்கையாளர்களை அடையும் உயர்தர ஆலோசனை வழிகாட்டல் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சியளித்தல் சேவைகளை வழங்குமுகமாக



உள்ளூர் சமூகத்துடன் வியாபார அபிவிருத்திச் சேவையானது கருமமாற்ற வேண்டும். இந்தச் சேவைகளாவன - வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்கும் தனிநபர் ஆலோசகர், அதேபோல நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபாரத்தை ஆரம்பித்தல், விரிவுபடுத்தல், ஏற்றுமதிசெய்தல், நிதியளித்தல், கல்வி அல்லது பயிற்சியளித்தல் மற்றும் ஏனைய வியாபார அபிவிருத்திச் சேவைகள் தேவைப்படுகின்றன. ஆயினும் தொழில்முயற்சியாளர்களுக்கு அபிவிருத்திச் சேவைகளை ஏற்பாடுசெய்ய திருப்தியான பொறிமுறை காணப்படவில்லை. தே.தொ.அ.அ. வானது வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) ஏற்பாட்டாளர்களின் இயலுமையைப் பலப்படுத்தத் திட்டமிட்டுள்ளதுடன், பொருத்தமான வியாபார ஒத்துழைப்புச் சேவை வலையமைப்பினைக் கட்டியெழுப்புவதுமாகும். தே.தொ.அ.அ. வானதுஇ வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) ஏற்பாட்டாளர்களின் தேவை மதிப்பீட்டினை நடாத்தியதுடன் வி.அ.சே. ஏற்பாட்டாளர்களில் 25 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது.

நிகழ்ச்சித்திட்டம் 03: பிராந்திய தொழில்முயற்சியாளர்களுக்கான விருதுவழங்கல் விழா.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆழமான பங்களிப்பினைச்செய்த தொழில் முயற்சியாளர்களினை அடையாளம் காணல், ஊக்கமளித்தல் மற்றும் உந்துசக்தியளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தொழில்முயற்சியாளர் விருதுவழங்கும் விழாவினை தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது நடாத்துகின்றது. தே.தொ.அ.அ.வானது, மாவட்ட மன்றங்கள் மற்றும், அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாவட்டங்களிலுமாக, ஒன்பது விருதுவழங்கல் விழாக்களினை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

தே.தொ.அ.அ.வானது, ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் சேவை உடன்படிக்கை ஒன்றினைக் கைச்சாத்திட்டுள்ளதுடன் 2018ஆம் ஆண்டில் எட்டு (08) விருதுவழங்கும் விழாக்களினையும் நடாத்தியது.





கண்டி மற்றும் அம்பாறையிலான தொழில்முயற்சியாளர் விருதுவழங்கல் விழா.

நிகழ்ச்சித் திட்டம் 04: மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் தொழில்முயற்சியாளர்களுக்கு, வியாபார அபிவிருத்திச் சேவைகளை ஏற்பாடு செய்யுமுகமாகப் பொருத்தமான பொறிமுறையினை அபிவிருத்திசெய்வதனை நோக்கமாகக் கொண்டு மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள் மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களானவை தாபிக்கப்பட்டுள்ளன. இது மாவட்டத்தின் அரசுசார்பான மற்றும் அரசுசார்பற்ற வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) வழங்குநர்கள், மன்றங்கள் மற்றும் வர்த்தக வியாபாரக் கழகங்களினை உள்ளடக்கியுள்ளது. தே.தொ.அ.அ. வானது, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் முயற்சியாளர் குழுக்களைத் தாபிக்கத் திட்டமிட்டுள்ளது.

தே.தொ.அ.அ. வானது, 2018ஆம் ஆண்டுவரை, 14 மாவட்ட தொழில் முயற்சியாளர் குழுக்களையும்இ மற்றும் 232 பிராந்திய தொழில் முயற்சியாளர் குழுக்களையும் தாபித்துள்ளது.

மேலும், பிராந்திய மட்டத்தில் வியாபாரப் பிரச்சினைகளைக் கையாளப் பொருத்தமான முறைமையொன்றினைக் கட்டியெழுப்புமுகமாக, பிரச்சினைகளைக் கையாளல் வழியினை அபிவிருத்தி செய்துள்ளது.





மாத்தறை மாவட்டத்திலான மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் முயற்சியாளர் குழுக்கள்.

நிகழ்ச்சித்திட்டம் 05: தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.அ.அ.வானது, வியாபாரத் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஈடுபாடு கொண்டுள்ளது. தே.தொ.அ.அ. வானது, சந்தை அபிவிருத்தி தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தொழில்நுட்பம் பரிமாற்றல் மற்றும் நிதிஉதவிகள் ஆகியவற்றிலான களத்தில் இவர்களின் இயலுமையினை விருத்திசெய்ய விரும்புகின்றது. தே.தொ.அ.அ.வானது ஒவ்வொரு மாகாணங்களிலும் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை (315 பயனாளிகளுக்காக) நடாத்தியது.





மாத்தறை மற்றும் குருணாகலில் தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 06: வியாபார, வர்த்தகச் சந்தைகள்:

வியாபார, வர்த்தகச் சந்தைகளானவை பிராந்திய மட்டத்தில் சிறிய, நடுத்தர முயற்சிகள் துறையின் அபிவிருத்தி நோக்கத்திற்கென முன்மொழியப் பட்டவைகளாகும். தே.தொ.அ.அ.வானது கூடியவரையில் சிறிய, நடுத்தர மற்றும் நுண்ணளவு தொழில்முயற்சியாளர்கள் நாட்டிலும், பிராந்திய ரீதியிலும் கிடைக்கக்கூடிய வியாபார அபிவிருத்திச் சேவைகள், அதேபோல விசேட ஏற்பாட்டாளர்களினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியினையும், சேவைகளினையும் பற்றி அறியாதவர்களாகக் காணப்படுவதுடன், எனவே அவற்றிலிருந்து உச்ச சேவைகளைப் பெறமுடியாதவர்களாகவும் உள்ளனர். தோழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார சேவை ஏற்பாட்டாளர்களுக்குமிடையிலான இந்த இடைவெளியினை நிரப்புவதற்கு ஒரு பலமான தொடர்பினையும் பரஸ்பரம் உருவாக்க வேண்டும். வியாபாரச்சேவை வர்த்தக சந்தைகளானவை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்கிடையிலும், வியாபார அபிவிருத்திச் சேவை (வி.அ.சே) ஏற்பாட்டாளர்களுக்குமிடையிலும் ஒரு பாலமாக அமைவதுடன், வி.அ.சே. ஏற்பாட்டாளர்களிடமிருந்து உச்ச சேவைகளை பயன்படுத்த இவை உத்தேச தொழில்முயற்சியாளர்கள் களின் தொழில்முயற்சியாண்மை இயலுமையை உயர்த்துமென்பதாகும். அதேவேளையில் இது அவர்களின் உற்பத்தியினை அறிமுகம் செய்யவும், சந்தை இணைப்பினை தாபிக்கவும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். 2018 ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ. வானது ஒவ்வொரு மாகாணங்களிலும் இச் சந்தையினை நடாத்தியது.





கம்பஹா மாவட்டத்திலான வியாபார வர்த்தகச் சந்தை.

நிகழ்ச்சித்திட்டம் 07: பொதியிடல் உதவி தேவைப்படும் பிராந்திய தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிசெய்து கொடுத்தல்.

தே.தொ.அ.அ.வானது, நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு, அவர்களை, ,சுப்பர் மார்க்கட்" களுக்கான வழங்குநர்களாக தகுதிபெறுவதனை வசதிசெய்யும் பொருட்டு, அவர்களை ,சுப்பர் மார்க்கட்" களுக்கு அறிமுகம்செய்து வைக்கின்றது. எனவே, தே.தொ.அ.அ. வானது, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் உத்தேச வழங்குநர்களை அடையாளம் காண்பதுடன், அவர்களின் உற்பத்திகளின் தரம் மற்றும் வழங்கும் இயலுமை ஆகியவற்றினை மதிப்பீடு செய்கின்றது. தே.தொ.அ.அ.வானது, தொழில்நுட்பப் பயிற்சியளித்தலினை ஏற்பாடுசெய்வதன் மூலம் உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துவதற்கு ஒத்தாசை வழங்குகின்றது.

2018ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ. வானது, 90 தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தலினை, மாத்தறை மற்றும் கேகாலை மாவட்டங்களில் ஏற்பாடுசெய்தது.





பொதிசெய்தல் பயிற்சியளித்தல் - கேகாலை மாவட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 8: சர்வதேச வியாபாரத் தூதுக்குழு.

தே.தொ.அ.அ. இன் 2018ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தின்படி நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்கள் தங்களின் வியாபாரத்தைச் சர்வதேச மயப்படுத்துவதற்கு வசதியளிக்குமுகமாக சர்வதேச வியாபாரச் சந்தைகளுக்கு வியாபாரத் தூதுக்குக்களினை ஒழுங்குபடுத்துவதனை மேற்படி சேவையானது உள்ளடக்குகின்றது. தே.தொ.அ.அ. வானது, தாய்லாந்திலுள்ள "எக்ஸ்போ" உற்பத்தியாளர் கண்காட்சிக்கான வியாபார தூதுக்குழுவினை பூர்த்திசெய்துள்ளது. (இதில் 15 பங்குபற்றுவோர் உள்ளனர்.)

நிகழ்ச்சித்திட்டம் 9: வாங்குவோர், விற்போர் கூட்டம்.

நிலைபேறானதும், நியாயமானதுமான பொருளாதார வளர்ச்சிக்கு, வினைத்திறைமையான பங்களிப்பினைச் செய்வதற்கு, தொழில்முயற்சியாளர்களின் இயலுமையினை வரையறைசெய்வதாக அநேக காரணிகள் காணப்படுகின்றன. இவற்றில் சில காரணிகள் நன்கு அறிந்ததும், பின்வருவனவற்றை உள்ளடக்கியதுமாக காணப்படுகின்றன் தொழில்முயற்சியிலான அறிவு மற்றும் திறன் குறைபாடு, மூலதனக் குறைபாடு, சொத்து, மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறைபாடு, சந்தைகளுடனான நேரடிச் சந்திப்புகளை மேற்கொள்ளலினான வரையறை, தொழில்நுட்பத் திறன் போதாமை ஆகியன. தே.தொ.அ.அ.வானது, இந்தக் காரணிகளைப் பிரதானமாகக்கொண்டு சேவைகளை வழங்குகின்றது.



கம்பஹா மாவட்டத்திலான வாங்குவோர், விற்போர் கூட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 10: பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.அ.அ. வானது, இலங்கையின் பொருளாதாரத்தில், மாகாண மட்டத்தில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. தொழில்முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் நிதிமுகாமைத்துவம் ஆகியவற்றில் தொழில்முயற்சியாளர்கள் அறிவு குறைந்தவர்களாக உள்ளமையினை, தே.தொ.அ.அ. வானது, அடையாளம் கண்டுள்ளது. அவர்கள் வியாபாரத்தைத் தொடங்கவோ, தங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்தவோ நிதித் தடைக்கு முகம் கொடுக்கின்றார்கள். தே.தொ.அ.அ. வினது, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிராந்திய மட்டத்தில் பணிபுரிவதுடன், மேற்படி அறிவு மற்றும் திறன் ஆகியன தேவைப்படும் இந்த தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காண்கின்றனர்.

எனவே, தே.தொ.அ.அ. வானது, சிறிய பயிற்சியளித்தல் மற்றும் தொடர்ந்துசெல்லும் சேவைகளினை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் எல்லா மாவட்டங்களிலும் பிராந்திய மட்டத்தில் இந்த தொழில்முயற்சியாளர்களுக்கென அமுலாக்கத் திட்டமிட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, பிராந்திய மட்டத்தில் 12,100 தொழில் முயற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது.




களுத்துறை மற்றும் குருணாகல் மாவட்டங்களிலான பிராந்திய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 11: பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையத்தினைத் தாபித்தல் - மாக்கடுற.

பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது, புதிதாக ஒரு உற்பத்தி அல்லது சேவை வரிசைகளில் ஈடுபடும்போது ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும் ஒரு நிலையமாகக் காணப்படுவதுடன் முதலிடப்படவுள்ள தொடக்க மூலதனத்தின் அளவை உயர்தொழில்தரப் பின்னணியிலிருந்து குறைக்கக்கூடியதாக உள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமானது அப்பகுதியிலுள்ள நுண் மற்றும் சிறிய கைத்தொழில் சாலைகளுக்கு வசதிசெய்து கொடுப்பதும் பல்கலைக்கழகங்களிலிருந்து சித்தியடைந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் தங்களின் சுய திடகாத்திரத்திற்கு வளரும்வரை வியாபாரத்தினைத் தொடங்குவதற்கும் ஆகும்.

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினதும், சூழவுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் தேவைப்படும் புதுமையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உதவிகளுடன் தொழிலைத் தொடங்குவதற்கு பரீட்சித்துப்பார்த்தல் மற்றும் தொழில்நுட்பவியல் கைமாற்று நிலையமானது வசதிசெய்து கொடுக்கின்றது.

தாபிப்பு முகாமை மற்றும் தொழிற்பாட்டிற்கென தே.தொ.அ.அ. வானது, வயம்ப பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றிற்கு எட்டியுள்ளது. இந்தத் தொழில்நுட்பவியல் மற்றும் கைமாற்று நிலையமானது, கம்பனிகள் பதிவாளரிடத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகவும் பணிப்பாளர் சபை ஒன்றினால் முகாமைசெய்யப்படும் ஒரு கம்பனியாக எதிர்காலத்தில் காணப்படும்.

இன்றுவரை தே.தொ.அ.அ. வானது கட்டிட மற்றும் இயந்திர நிறுவுதலைப் பூர்த்தி செய்துள்ளதுடன் இது 2017 செப்ரெம்பரில் திறந்துவைக்கப்பட்டது. தற்போது தே.தொ.அ.அ. வானது தொழில்முயற்சியாளர்களுக்கும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கும் சேவைகளை வழங்குகின்றது.





தொழில்முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 12: இருபால் தொழில்முயற்சியாளர்கள் ,,உபாதிதாரி வைசக்க உதானய".

பல்கலைக்கழகப் பட்டதாரிகளை வியாபாரக் களத்தில் ஈடுபடுத்துவதற்காக, தே.தொ.அ.அ.வானது, பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துகின்றது. பட்டதாரிகளுக்கு வியாபாரத்தில் ஊக்கமளிப்பதற்காக இதற்கு ''உபாதிதாரி வைசக்க உதானய'' எனப் பெயரிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமானது பட்டதாரிகளை வியாபாரக் களத்தில் ஈடுபடவும், அவர்களை வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களாகக் கொண்டுவரவும் அவர்களுக்கு ஊக்கமளிப்பதாகும். தே.தொ.அ.அ.வானது, சப்பிரகமுவ, றஜரட்ட, ஊவாவெலஸ்ஸ, களனி, ஜயவர்த்தனபுர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களின் 205 பட்டதாரிகளுக்குப் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியதுடன் 13 பட்டதாரிகளுக்குக் கொடைகளையும் வழங்கியது.





பேராதனைப் பல்கலைக்கழகத்திலான பயற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 13: சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களைஇ (சி.ந.மு) தெரிந்துகொள்ளல் ஒத்துழைப்புச் சேவையில் மேன்மையுறச் செய்தல்.

பெருமளவான நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் (நு.சி.ந) வியாபாரச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மீது சரியான அறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர். எனவே தே.தொ.மு.அ.அ. வானது அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உத்துழைப்புச் சேவையுடன் மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தத் தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக தே.தொ.அ.அ. வானது இலங்கையிலுள்ள நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வரிமதிப்பும், வரிமதிப்புத் செயற்பாடும் தொழில் சம்பந்தமான சட்டங்கள் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சேவைகள் பற்றி ஒருநாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்கு செய்தது. வளவாளர்கள் வரிமதிப்பீட்டுத் திணைக்களம் தொழில் திணைக்களம் மற்றும் என்பனவற்றிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் மாவட்டச் செயலாளர்கள் மூலமாக நடாத்தப்பட்டதுடன் தே.தொ.அ.அ.வானது மாவட்டத்திற்கு 100 நு.சி.ந. தொழில்முயற்சியாளர்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது.

தே.தொ.அ.அ. வானது வியாபாரச் சட்டங்கள், ஒழுங்குவிதிகளிலான விழிப்புணர்வு செயற்றிட்டத்தினை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒத்துடைப்புடன் ஏற்பாடுசெய்கின்றது. தே.தொ.அ.அ. வானது 14 மாவட்டங்களில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தியது.



கண்டி மாவட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

நிகழ்ச்சித்திட்டம் 14: இலங்கையின் இளைஞர்களை தொழில்முயற்சியாண்மையூடாக மேன்மையடையச்செய்தல்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது இளைஞர்களுக்கு (தொழில்முறை ∴ தொழில்நுட்பக் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் அல்லது சித்திபெற்று வெளியேறிய மாணவர்கள் அல்லது கைவினை இளைஞர் தொழில்முயற்சியாளர்கள்) தொழில்முயற்சித் திறனை விருத்திசெய்தல், நிதிசார் வசதிகளை ஏற்பாடு செய்தல், புதிய தொழில்நுட்பவியல், வியாபார ஆலோசனை கண்காணிப்பு புதிய வடிவமைப்பு போன்றவற்றில் ஒத்துழைப்பு வழங்குவதற்காகும். எனவே, பூகோளப் பொருளாதாரத்தில், சந்தர்ப்பங்களின் எல்லைகளின் மட்டத்தினை இளைஞர்கள் அடையுமுகமாக தொழில் முயற்சியாண்மைகளின் வினைத்திறமையினை இலங்கையில் தரமுயர்த்துவதற்கு நாட்டு மக்களுக்கான அபிவிருத்தியில் இந்த விடயமானது முக்கிய பங்களிப்பினைக் கொண்டிருக்கின்றது.

தே.தொ.அ.அ.வானது தொழில்முறை பயிற்சியாளர்களுக்கும், இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கும், இளைஞர் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடுசெய்கின்றது.

2018ஆம் ஆண்டில் தொழில்நுட்பக் கல்வி பயிற்சியளித்தல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்கியது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது மேல் மாகாணத்திலிருந்து ஆரம்பமாகிறது. தே.தொ.அ.அ. வானதுஇ 100 பயனாளிகளைத் தெரிவுசெய்ததுடன், அவர்களுக்கு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சியளித்தலினை ஏற்பாடுசெய்தது. 2019ஆம் ஆண்டில் அவர்களுக்கு இயந்திரங்களும், உபகரணங்களும் வழங்கப்படும்.



களுத்துறையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

15. தொழில்முயற்சியாண்மை முகாமைத்துவ முறைமை (ஈ.எம்.எஸ்).

தொழில்முயற்சியாண்மைகளின் ஆரம்பக் கட்டத்தில், ஒரு தரவு அடிப்படை முறைமையினை உருவாக்குவதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் (நேனுயு) அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் பதிவேடுகளை வைத்து, புதிய தொழில்முயற்சியாண்மைகளை பதிவுசெய்ய ஒரு தானியங்கி எண்கணித முறையிலான முறைமையொன்றே இந்த தொழில்முயற்சியாண்மை முகாமைத்துவ முறைமையாகும்.

இது இலகுவான பயன்பாட்டிற்கான அடிப்படை வேலையோட்டத்தினை ஏற்பாடுசெய்யும் அதேவேளையில் தொழில்முயற்சியாண்மைகளின் உரிமையாளர்களுடன் கூட்டங்களை நடாத்தி அவர்களின் தகவலைத் திரட்டவும், அவர்களைப் பின்தொடரவும் பயன்படுகின்றது.

தே.தொ.அ.அ. இன்இ உத்தியோகத்தர்கள் தே.தொ.அ.அ. உற்பத்திகளை தொழில்முயற்சியாளர்களுக்கு நம்பிக்கையுடன் அறிமுகம் செய்யும் வழிகாட்டியாக இந்த தொழில்முயற்சியாண்மை முகாமைத்துவ முறைமை (ஈ.எம்.எஸ்) என்ற தொடர்பாடல் அமைப்புக் காணப்படுகின்றது.

தே.தொ.அ.அ.வானது,தொழில்முயற்சியாளர்களுக்கு சேவைவழங்குமுகமாக இந்த ஈ.எம்.எஸ் ஆனது மிகவும் திறமைவாய்ந்த ஒரு மேடையினை உருவாக்கும்.





அம்பாறை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களிலான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம்.

16. தொழில்முயற்சியாண்மைக் கல்வியின் மீதான பிராந்திய "ஆசிய பசுபிக்" 07வது "யுனெஸ்கோ அபிட்" கூட்டம்.

அபிவிருத்திக்கான கல்விப் பிரிவின் புதியன கண்டுபிடித்தல் பற்றிய, யுனெஸ்கோவின் ஆசிய பசுபிக் நிகழ்ச்சித்திட்டத்தினால் நடாத்தப்படும் தொழில் முயற்சியாண்மைக் கல்வியிலான பிராந்திய ''ஆசிய பசுபிக்'' 07வது ''யுனெஸ்கோ அபிட்'' கூட்டமானது ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றது.

யுனெஸ்கோ மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் கூட்டாக பல பங்குதாரர்களை உள்ளடக்குவதாக இயங்கும் வருங்கால தொழில்முயற்சியாளர்கள் எனும் தொனிப்பொருளில் 09-11 அக்டோபர் 2018 இல் இலங்கையின், திருகோணமலை ''ரின்கோ புளு'' இல் நடாத்தப்பட்டது.



இது சர்வதேச ரீதியாக சர்வதேச ஊடகம், யுனெஸ்கோ வலையமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச பங்காளர் அமைப்புகளினால், கூட்டாக உலகம் முழுவதும் காண்பிக்கப்பட்டதுடன், 20க்கு மேற்பட்ட நாடுகளுக்கு அரசாங்கப் பிரதிநிதிகள், ஐ.நா. முகமைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறையினரிலிருந்து 80க்கு மேற்பட்ட சிரேஸ்ட பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள்.

17. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டு வழிகாட்டப்பட்டு கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழ் அமுலாக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் நுண், சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கானஇ திரும்பவும் நல்லநிலைக்குச் செல்லலைக் கட்டியெழுப்பல் என்ற வழிகாட்டி நூலினை மேலோட்டமாக வரைவதற்கும், அறவீட்டுக்கொள்கையினை இணையத்தளத்தில் வரைவதற்கும், தே.தொ.மு.அ.அ. வானது பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்கியது. இதன்படி 2018ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

(1) தே.தொ.மு.அ.வானது, தொழில்நுட்பச் செயற்பாட்டுக் குழுவில் ஒரு அங்கத்தவராக தொழிற்பட்டு பங்குதாரர் அமைப்புகளுடன் சேர்ந்து 06 பிராந்திய மட்ட நிகழ்சித் திட்டங்களை நடாத்தியது.

(2) மூன்றுநாள் ரீ.ஓ.ரீ. வதிவிட நிகழ்ச்சித்திட்டமானது தே.தொ.மு.அ.அ.இன் பிராந்திய பிராந்திய அலுவர்கள் பிராந்திய உத்தியோகத்தர்களின் இயலுமையைப் பெறுவதற்கென அபிவிருத்தி செய்து நடாத்தப்பட்டது.

(3) நுண், சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தொடர்ந்துசெல்லும் வியாபாரத்திட்டத்தின்மீது (பீ.சீ.பீ) இரத்தினபுரி களுத்துறை காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 04 பிராந்திய வேலைப்பட்டறைகள் பூர்த்தி செய்யப்பட்டன.



தே.தொ.மு.அ.இன் பிராந்திய அலுவலர்களுக்கான



ரீ.ஓ.ரீ.

18. நீங்கள் வழிகாட்டுங்கள் செயற்றிட்டம்.

நீங்கள் வழிகாட்டுங்கள் என்பது ஐ.ஈ.எஸ்.ஈ (றறற.நைளஉ.முசப.்.லழரடநயன) இனால் அமுலாக்கப்பட்ட ஒரு ,,வெகா'' செயற்றிட்டமாகும். இதன்படி தே.தொ.அ.அ. வானதுஇ அவர்களுடன் சேர்ந்த ஒரு பிரதான பங்காளராக தொழிற்படுகின்றது. இவர்கள் அரசாங்க மற்றும் தனியார் அமைப்புகளிலுள்ள வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களிடமிருந்து சிபார்சுகளையும், அனுபவங்களினையும் சேகரிக்குமுகமாக அவர்களின் பங்குபற்றலுடன் பல வேலைப்பட்டறைகளை நடாத்தியுள்ளனர். எனவே நாம் இந்தச் செயற்றிட்டத்தின் வெளியிடுகையாக ஏதாவது ஒரு வியாபார அபிவிருத்தி சேவை வழங்குமுகமாக இலங்கைக்கான பொதுவான தொழில்முயற்சியாளர் அபிவிருத்திப் பாடவிதானமாக இதனை

அபிவிருத்தி செய்துள்ளோம். அபிவிருத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் அவர்களின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

தே.தொ.மு.அ.வானது நிதிமுகாமைத்துவம் மற்றும் நிதி நிறுவனங்களுடனும் எப்படி வேலைசெய்வது என்பது பற்றியும் நீங்கள் ''வழிகாட்டுங்கள்'' இன் ஒத்துழைப்புடன் களுத்துறை மாவட்டத்தில் ஒரு தெரிந்துகொள்ளல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது. களுத்துறை மாவட்டத்தில் தொழிற்படும் வங்கித் துறையினரால் நியமிக்கப்பட்ட எல்லோரும் அத்துடன் நூற்றிஅறுபது (160) தொழில்முயற்சியாளர்களும் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.



19. ஐ.நா.அ.செ.தி. சமூக தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

குருணாகல் மற்றும் கண்டி மாவட்டங்களில் வெற்றிகரமாகத் தொழிற்படும் தனிநபர் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சமூக தொழில்முயற்சியாளர்களுடன் பெற்றுக்கொள்ளப்படும் தொழில் முயற்சியாண்மை திறன் மற்றும் சமூக தொழில் முயற்சி அபிவிருத்தியில் பெற்றுக்கொள்ளப்படும் அனுபவத்தினைப் பகிருமுகமாக தெரிவுசெய்யப்பட்ட 300 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மூன்று முழுநாள் ரீ.ஓ.ரீ. வதிவிட நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்தியது.

சமூக தொழில்முயற்சியாளராக அபிவிருத்திசெய்வதற்கு பொல்லநறுவை மாவட்டத்திலுள்ள விவசாயமல்லாத மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழில்களில் ஈடுபடும் தற்போதுள்ள 300 தொழில்முயற்சியாளர்களுக்கு கள வேலைப்பட்டறைகள் நடாத்தப்பட்டன.

செயற்றிட்டத்தின் முக்கிய பங்குதாரர்களுடனான பங்குபற்றலுடன் சமூக தொழில்முயற்சியினூடாக அடையாளம் காணப்பட்ட உத்தேச தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யுமுகமாக முக்கிய விடயங்களுடன் தொகுக்கப்பட்ட சிபார்சு அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டது.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக்கூற்	**குறிப்பு**	**2019 ரூ.**	**2018 ரூ.**
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியங்களின் பயன்பாடு			
ஆண்டிற்குரிய மானியம்	**18**	37,057,416	28,557,098
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவுகள்	**9**	37,057,416	28,557,098
நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான ஆண்டுக்கான மிகை.∴ (குறை)		-	-
செயற்பாடுகள்			
பொது திறைசேரியிலிருந்து மீண்டெழும் மானியங்கள்		25,260,257	24,617,557
திரட்டப்பட்ட அரசாங்க மானியங்கள்	**14**	2,545,873	2,505,842
பிற வருமானங்கள்	**7**	825,256	6,121,726
மொத்த வருமானம்		**28,631,386**	**33,245,125**
நிர்வாகச் செலவுகள்	**8**	29,499,033	26,600,152
பிற கருத்திட்ட செலவுகள்	**9**	-	2,999,340
மொத்த செலவுகள்		**29,499,033**	**29,599,492**
ஆண்டுக்கான தேறிய மிகை.∴(குறை)		**(867,647)**	**3,645,633**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று	**குறிப்பு**	**2019 ரூ.**	**2018 ரூ.**
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
காணி, கட்டிடம் மற்றும் உபகரணம்	**10**	5,752,892	7,476,170
நடைமுறை சொத்துக்கள்			
பெறுவனவுகள்	**11**	1,754,416	374,591
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	**12**	89,970,926	103,179,402
முற்கொடுப்பனவுச் செலவுகள்	**13**	98,604	93,716
பண்டிகைகான முற்பணங்கள்		24,000	9,000
இடர் கடன்		2,232,034	2,095,588
காசு மற்றும் காசுக்கு சமனானவை		351,521	2,016,990
டீ.நுஒிசநளள டுவன	**22**	600	46,450,000
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**94,432,100**	**154,219,287**
சேமிப்புக் கணக்குகள்- பணிக்கொடை		583,670	561,941
மொத்த பிற நடைமுறை சொத்துக்கள்		**583,670**	**561,941**
மொத்த சொத்துக்கள்		**100,768,662**	**162,257,401**
உரிமையாண்மையும் பொறுப்புகளும்			
திரட்டப்பட்ட மிகைகள்		2,405,900	49,798,341
மொத்த உரிமையாண்மை		**2,405,900**	**49,798,341**
நடைமுறை அல்லா பொறுப்புக்கள்			
அரசாங்க மானியம்	**14**	2,899,092	4,867,072
ஓய்வூதிய நன்மை பொறுப்புகள்	**15**	1,692,735	1,051,929
மொத்த நடைமுறை அல்லா பொறுப்புக்கள்		**4,591,827**	**5,919,000**
நடைமுறை பொறுப்புக்கள்			
நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானியம்	**16**	89,676,008	104,067,179
அட்டுறு செலவுகள்	**17**	3,831,070	1,745,747
அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள்	**18**	76,630	539,906
ஆ.ஃ.ளூ ருனூீ	**18**	187,228	187,228
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்		**93,770,936**	**106,540,060**
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்		**100,768,662**	**162,257,401**

05 தொடக்கம் 19 வரையான குறிப்புகளடங்கிய பக்கங்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை 54ணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதாக நான் உறுதியளிக்கின்றேன்.

…….....

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று

	உரிமையாண்மை மிகைகள்	மொத்தம்
	ரூ.	ரூ.
2018 ஜனவரி 01 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**26,303,316**	**26,303,316**
வருடத்திற்கான தேறிய மிகை	3,645,633	3,645,633
2017 ஆம் ஆண்டிற்கான சீர் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவுகள்	19,638,313	19,638,313
சீர் செய்யப்பட்ட முற்பண காப்புறுதி மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான திவியட உதான நிகழ்ச்சித்திட்டம்	1,017,647	1,017,647
2017 ஆம் ஆண்டிற்கான கணினி மற்றும் துணைக்கருவிகளுக்கான சீர் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு, கணக்காய்வுக் கட்டணங்கள் மற்றும் எழுதுகருவிகள்	(806,569)	(806,569)
2018 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**49,798,341**	**49,798,341**
ஆண்டிற்கான தேறிய மிகை	(867,647)	(867,647)
சீர் செய்யப்பட்ட முற்பண கொடுப்பனவுகள்	(43,997)	(43,997)
சீர் செய்யப்பட்ட டீ. நுஷிசநளள டுவன இன் முதலீடு	(46,450,000)	(46,450,000)
2018 ஆம் ஆண்டிற்கான சீர் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு	(30,797)	(30,797)
2019 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான மீதி	**2,405,900**	**2,405,900**

05 தொடக்கம் 18 வரையான குறிப்புகளடங்கிய பக்கங்கள் நிதியின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.

.....

கணக்காளர்

கையொப்பம்

.....

அசங்க குணசிங்க-

தலைவர்∴ பணிப்பாளர் நாயகம்

இந் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பானதாகும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக ஒப்புதல் மற்றும் கையொப்பமிடப்பட்டது.

.....	.....
பணிப்பாளர்	பணிப்பாளர்
திரு. அசங்க விஜேசுந்தர	திரு. ஏ. ஹேமசிரி பெரேரா

டீஏசீ.்.பி.்.என்ஈடிஏ.்.எப்ஏ.்.2018 2022 நவம்பர் 30 ஆம் திகதி

தலைவர்,

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசு பாய்ச்சற் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. நிதி அறிக்கைகளினது கால தாமதத்தின் காரணமாக அதிகாரசபை தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கையானது 2020 ஜூலை 24 ஆம் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினது முக்கியத்துவத்தின் காரணமாக அதிகாரசபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு இணங்க உண்மைத்தன்மையினையும் நியாயத்தன்மையினையும் பிரதிப்பளிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இ.க.நி. 16- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ).நியமங்களின் 51 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆயட்காலத்தினைக் குறைத்து எல்லா நிதி ஆண்டுகளின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்பு நிலைமையொன்றில் மேலே மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படின் அம்மாற்றங்கள் இ.க.நி. 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் வித்தியாசமொன்றாகக் கருதி கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் எழுதப்பட்ட இறுதி மீதி ரூ. 7இ476இ170 ஆவதுடன் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், நூலகங்களுக்கான புத்தகங்கள், கணக்கீட்டு மென்பொருட்கள் மற்றும் கணினியும் துணைக்கருவிகளினதும் எஞ்சிய பெறுமதியும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலமும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ).நியமங்களின் 79 (ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு ஆனாலும் தற்போது வரையிலும் பயன்படுத்தப்பட்டுவரும் ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தேறிய மீதியானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு ஆனாலும் தற்போது வரையிலும் பயன்படுத்தப்பட்டு வரும் 03 மோட்டார் வாகனங்கள், 22 அலுவலக உபகரணங்கள் மற்றும் 37 கணினி மற்றும் துணைக்கருவிகளின் தேறிய மீதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2. கணக்கீட்டின் குறைப்பாடுகள்

(அ). அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் நிறுவனமொன்றினால் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பங்குச்சான்றிதழின் பிரகாரம் நிறுவனத்தின் வெளியிடப்பட்ட 100 பங்குகளில் ஒரு பகுதியானது ஒவ்வொன்றும் ரூ.10 படி 60 பங்குகள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அப் பங்குகளின் வழங்களானது மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ). முன் அபிவிருத்தி மற்றும் தொழிநுட்ப பரிமாற்றல் மத்திய நிலையமொன்றினை அமைப்பதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சினால் ரூ.46,450,000 மூலதன மானியமொன்று அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதியானது அதிகாரசபையினால் வருமானமாகக் கருதப்பட்டதுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவீனங்கள் அதிகாரசபையின் நடைமுறை சொத்துக்களின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனத்தினது முதலீடாக காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் திரண்ட மிகை மற்றும் நடைமுறை சொத்து ரூ. 46,450,000 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. இக் கணக்கீட்டு நியமத்தின் கீழ் எனது பொறுப்பானது, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ச்சியாக செயற்படும் ஆற்றல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்புச் செய்வற்கு முற்படுதல் அல்லது வேறு உபாயமார்க்கங்கள் இல்லாத போது செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தவிர்த்து தொடர்ச்சியாக செயற்படும் என்ற அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் அதிகாரசபையானது தொடர்ச்சியாக செயற்படுவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதலானவை முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கள், ஆளுகைத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு கட்டளைச்சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியதும் சரியான வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

1.4 நிதி கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுப்பட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றினை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான வழுக்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுப்பிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. வழுக்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தும் தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கப்படுபவை பொறுண்மையான வழுக்கூற்றாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்களும் தொழில்சார் ஐயப்பாடுகளும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச்சான்றுகளை பெற்றுக்கொள்வதே எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடிகளினால் ஏற்படக்கூடிய தாக்கமானது பாரதூரமானதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ப்புச் செய்தல் முதலானவை மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் உண்மைத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையானது தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்றத்தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடு தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றத்தன்மை காணப்படுவதாக நான் தீர்மானித்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லையாயின் எனது அபிப்பிராயமானது மாற்றியமைக்கப்படல் வேண்டும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான செயற்பாடுகள் முடிவுறுத்தப்படலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிர்வாக ரீதியான பலவீனங்கள் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பாக ஆளுகைத் தரப்பினர்களுக்கு அறியத்தருகின்றேன்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது அவதானிப்புகளின் பிரகாரம் முறையான நிதிக் கூற்றுக்கள் அதிகாரசபையினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 . 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (வை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒத்திருந்தன.

2.1.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களை கட்டுப்படுத்துவதனூடாக, கீழே குறிப்பிடப்பட்ட வெளிப்பாடுகள் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் சிலருக்கு அதிகாரசபையுடன் தொடர்புடைய சில ஒப்பந்தங்கள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ சாதாரண வியாபார போக்கினைத் தாண்டிய தொடர்பொன்று உள்ளது.

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளை தவிர சில தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது

அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளது.

சட்டங்கள், விதிகள்.·. கட்டளை முதலியவற்றுக்கான தொடர்பு	விடயங்கள்
(அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் மற்றும் அறவிடப்படடிருக்க 2008 இன் ஜனவரி 01 ஆம் திகதிய 1530.·.13 இலக்க இலங்கை சனாநாயக சோசலிச குறைக்கப்பட்டிருக்கவில்லை. குடியரசின் வர்த்தமானி	ரூ. 25,000 ஐ விட கூடிய கொடுப்பனவிற்காக ரூ.25 பெறுமதியான முத்திரைக்கட்டணம் வேண்டும் எனினும், 10 சந்தர்ப்பங்களில் ரூ.1,646,130 பெறுமதியான கொடுப்பனவிற்குரிய முத்திரைக்கட்டணமானது
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி	
(i) நிதி ஒழுங்குவிதி 104 மற்றும் 105	மீளாய்வாண்டினுள் 05 சந்தர்ப்பங்களில் அதிகாரசபையின் வாகனங்கள் விபத்திற்குள்ளான போதிலும் அது தொடர்பாக ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.
(ii) நிதி ஒழுங்குவிதி 395 (இ)	வங்கிக் கணக்கொன்றினை பேணும் எல்லா நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் காணப்படும் கொடுக்கல் வாங்கல் நிலைமைகள் தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வங்கி இணக்கக் கூற்றானது தயாரிக்கப்பட வேண்டும் எனினும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்குரிய வங்கி இணக்கக்கூற்றானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(iii) நிதி ஒழுங்குவிதி 507 மற்றும் 756	டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பான கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையொன்று

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பான கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளை தவிர, அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்றிறனுடனும் வினைத்திறனாகவும் காலவரையறைக்குள் சட்டங்கள் விதிகளுக்கு இணங்க கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ). 50 தொழில்முயற்சி அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கு திறன் அபிவிருத்திக்கான

பயிற்சினை வழங்குவதற்காக ரூ. 500,000 ஒதுக்கப்பட்ட போதிலும் 27 தொழில்முயற்சி அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கு மாத்திரமே பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் நிதி ஏற்பாடுகளில் நூற்றுக்கு 26 சதவீதமானவை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 200 தொழில் முனைவோருக்கு பொதியிடல் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூ.850,000 மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், நிதி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் மாத்தறை மற்றும் கேகாலை மாவட்டங்களின் தொழில் முனைவோருக்கு மாத்திரமே பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) பட்டதாரி தொழில் முனைவோர் எழுச்சியின் கீழ் 150 பட்டதாரிகளை பயிற்றுவிப்பதற்கும் 25 பேருக்கு நிதியுதவி வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டு ரூ.4.5 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டினுள் 13 பட்டதாரிகளுக்கு மாத்திரம் ரூ.1,825,000 நிதியுதவியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ஐளுழு தரச்சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக ரூ. 200,000 நிதி ஏற்பாடானது ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் முகாமைத்துவ முறைமையினை வலுப்படுத்துவதற்கு ஆலோசகரொருவரின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தலொன்றை மாத்திரம் பிரசுரித்திருந்தது.

ஐளுழு தரச்சான்றிதலினைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூ. 71,262 ம், 2017 ஆம் ஆண்டில் ரூ. 125,000 ம், மீளாய்வாண்டில் ரூ. 35,880 ம் ஆக மொத்தம் ரூ 232,142 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஐளுழு தரச்சான்றிதழினை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சினது மீளாய்வாண்டிற்குரிய செயற்பாட்டுத் திட்டத்தில் அதிகாரசபையினூடாக செயற்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டு இளந்தொழில்முயற்சி அபிவிருத்திக்காக அமைச்சினால் அதிகாரசபைக்கு ரூ. 5.7 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அமைச்சினால் அவ் வேலைத்திட்டத்திற்காக ரூ. 1.14 மில்லியனை முற்பணமாக வழங்கியிருந்தது. இவ் வேலைத்திட்டத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 25 தொழிற் பயிற்சியாளர்கள் என்ற அடிப்படையில் 09 மாவட்டங்களிலிருந்து 225 பேரை பயிற்சியளிப்பதற்காகவும் 180 பேருக்கு ரூ. 100,000 என்ற அடிப்படையில் வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கான நிதியுதவியினை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் இவ் வேலைத்திட்டமானது முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டியதுடன் ஆண்டிறுதியில் மேல் மாகாணத்தில் 100 பயனாளர்களை இனங்கண்டு வியாபார திட்டங்களை தயாரித்தல் தொடர்பான 02 நாட்கள் பயிற்சியொன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ஆண்டின் இறுதிவரையில் ரூ. 678,914 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) முழெற ாழற செயற்றிட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நுண், சிறு மற்றும் நடுத்தர 100 தொழில்முனைவோரை இலக்காகக் கொண்டு முதற் கட்டமாக வரி விதிப்பு, வரி விதிப்பு நடைமுறை, தொழிலாளர் தொடர்பான சட்டங்களும் விதிகளும் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சேவைகள் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூ.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட முழுமையான நிதி ஏற்பாடானது கிடைக்கப்பெறாத நிலையில் 14 மாவட்டங்களில் மாத்திரம் அந்நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன்

அம்மாவட்டங்கள் 06 இல் 373 தொழில் முனைவோருக்கு மாத்திரம் தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

(எ) அலுவலகத்திற்கான இடமொன்றினை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக கொள்முதல் அறிவிப்பொன்றினை வெளியிடுவதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூ.49,507 செலவிடப்பட்டிருந்ததுடன் அவ் அறிவிப்புக்கான விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி திகதியினை நீடிப்பதற்காக மீண்டும் ரூ.48,300 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அமைச்சின் அலுவலக கட்டிடமொன்றிலேயே உரிய அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் அதற்காக செலவிடப்பட்ட ரூ. 97,807 ஆனது இலாபமற்ற செலவொன்றாக காணப்பட்டது.

2.3 வேறு விடயங்கள்

(அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்களுக்கு மத்தியில் கீழே குறிப்பிடப்பட்ட பிரதான நோக்கங்களினை அடைந்து கொள்வதில் அதிகாரசபையானது தோல்வியடைந்திருந்தது.

(i) சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சர்வதேச சந்தைகளை கைப்பற்றுவதற்கு உள்நாட்டு தொழில் முனைவோரை சர்வதேசமயமாக்கும் நோக்கத்துடன் தொழில் முனைவோரை இலங்கைக்கு வெளியே நிலைநிறுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் ஊக்குவித்தல்.

(ii) தொழிநுட்ப வளர்ச்சி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேற்றன் உரிமையினையுடைய வணிக நடவடிக்கைகளுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குரிய தொழிநுட்ப அபிவிருத்தி நிதியமொன்றினை நிறுவுதல்.

(ஆ) 2003 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடி.:.12 இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டானது முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவுகளின் ஆண்டறிக்கையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களானவை

2022 ஒகஸ்ட் 18 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டில் 02 தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்காகவும், 06 தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிக்காகவும் ஆட்சேர்ப்பு செய்வதற்காகவும் 2018 ஆம் ஆண்டில் 02 தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்காகவும், 08 தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிக்காகவும், பிரதி பணிப்பாளர் பதவியொன்றுக்காகவும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பத்திரிகை அறிவித்தல்களை பிரசுரிப்பதற்காக முறையே ரூ.163,760 மற்றும் ரூ. 315,962 செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவிகளுக்காக 2018 டிசம்பர் 31 ஆம் திகதிவரை ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிட்டது:

டபள்யூ. பீ. சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி